**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,**
**பெரியகுளம்.**

<u>அசல் வழக்கு எண்.</u> 52/2024 நாள். 04.03.2026

<u>வாதி தரப்பு சாட்சி எண்.</u> 2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சசிக்குமார் | ஊர் | : | கெங்குவார்பட்டி |
| தந்தை பெயர் | : | தனுஷ்கோடி | தாலுகா | : | தேனி |
| தொழில் | : | வியாபாரம் | வயது | : | 51/2026 |

ஆணையுறுதி சட்டப்படி, மொழிப்பெயர்பாளர் செல்வி. சுதாமணி மூலமாக சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். 1908 ம் ஆண்டு, சிவில் நடைமுறைச் சட்டம் பிரிவு கட்டளை XVIII விதி 4 ன்கீழ், சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

<u>வாதி தரப்பில் 2 ம் சாட்சியின் முதல் விசாரணை</u>:

நான் இந்த வழக்கின் வாதி தரப்பு 2 வது சாட்சி ஆவேன். எனது தரப்பில் நிருபண பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். நான் தாக்கல் செய்யும் நிருபண வாக்குமூலத்தில் கூறியுள்ள சங்கதிகள் யாவும் எனக்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். எனது நிருபண வாக்குமூலத்தில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மையானவைகள் ஆகும். எனது தரப்பில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. வாதி கோரியபடி தீர்ப்பாக வேண்டி பிரார்த்திக்கிறேன்.

**<u>1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

(1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர் ஆகாததால் 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பிலான குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு,தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

SANKAR Digitally signed by SANKAR Date: 2026.03.04 16:01:17 +0530

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,**
**பெரியகுளம்.**